பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
16 11 2024 6 45
சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு நரேந்திரமோடி நைஜீரியா, பிரேசில் மற்றும் கயானா நாடுகளுக்கு ஆறு நாள் பயணமாக இன்று புறப்படுகிறார்.
- கைவினை கலைஞர்களின் தயாரிப்புகளுக்கு மத்திய அரசு சந்தை வாய்பபுக்களை ஏற்படுத்தி தருவதாக மத்திய அமைச்சர் திரு வீரேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளை கண்டறிந்து அவர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்து வழங்க 22 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு க பொன்முடி தெரிவித்துள்ளார்.
- மாநில அரசின் மக்கள் நலத் திட்டங்கள் விவசாயிகள் மற்றும் பொதுமக்களை சென்றடைய கூட்டுறவு அமைப்புகள் பெரிதும் துணை நிற்பதாக மாநில அமைச்சர் திரு ஆர் காந்தி தெரிவித்துள்ளார்.
- தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான நான்காவது மற்றும் இறுதி டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 135 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரை கைப்பற்றியது.

---- *இனி விரிவான செய்திகள்* ---

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி நைஜீரியா, பிரேசில் மற்றும் கயானா நாடுகளுக்கு ஆறு நாள் பயணமாக இன்று புறப்படுகிறார்.

முதல் கட்டமாக நைஜீரியா அதிபர் திரு போலோ அகமது தினாபு அழைப்பின் பேரில் அந்நாட்டிற்குச் செல்கிறார்.

கடந்த 17 ஆண்டுகளில் இந்திய பிரதமர் ஒருவர் நைஜீரியா செல்வது இதுவே முதல் முறையாகும்.

தமது பயணத்தின்போது இந்தியா – நைஜீரியா இடையே இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாகவும், உத்திசார் ஒத்துழைப்பு தொடர்பாகவும் அந்நாட்டு தலைவர்களுடன் பிரதமர் பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

நைஜீரியா 2007-ஆம் ஆண்டு முதல் இந்தியாவுடன் மிகவும் நெருங்கிய நட்பு கொண்ட நாடாகவும், பொருளாதாரம், எரிசக்தி, பாதுகாப்பு ஆகிய துறைகளில் கூட்டாகவும் செயல்பட்டு வருகிறது.

நைஜீரியாவில் 200-க்கும் மேற்பட்ட இந்திய நிறுவனங்கள் 27 பில்லியன் டாலருக்கும் அதிகமாக முதலீடுகள் செய்துள்ளன.

நைஜீரியாவில் இந்திய சமூகத்தினரையும் சந்தித்து திரு நரேந்திரமோடி கலந்துரையாடவுள்ளார்.

தமது பயணத்தின் இரண்டாவது கட்டமாக இம்மாதம் 18, 19 தேதிகளில் பிரேசில் தலைநகர் ரியோடி ஜெனிரோவில் நடைபெறவுள்ள

ஜி-20 நாடுகளின் உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார்.

இந்த மாநாட்டில் சர்வதேச விவகாரங்களில் இந்தியா நிலைப்பாட்டை பிரதமர் எடுத்துரைக்கவுள்ளார்.

உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக பல்வேறு நாடுகளின் தலைவர்களையும் அவர் சந்தித்து பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

தமது பயணத்தின் கடைசி கட்டமாக இம்மாதம் 19-ஆம் கயானா செல்லும் பிரதமர், அந்நாட்டு தலைவர்களை சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சு நடத்துகிறார்.

கயானா நாடாளுமன்றத்திலும் பிரதமர் உரையாற்றவுள்ளார்.

அங்கு வசிக்கும் இந்திய வம்சாவளியினரையும் அவர் சந்தித்து பேசவுள்ளார்.

1968-ஆம் ஆண்டுக்குப் பின்னர் கயானா செல்லும் முதல் இந்திய பிரதமர் திரு நரேந்திரமோடி என்பது குறிப்பிடத்தக்கது.

**[]<<<>>>[]**

கைவினை கலைஞர்களின் திறமையை ஊக்குவிப்பதோடு அவர்களின் தயாரிப்புகளுக்கு மத்திய அரசு சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்தி தருவதாக மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் திரு வீரேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இந்தியா – சர்வதேச கண்காட்சியில் நேற்று உரையாற்றிய அவர், நூற்றுக்கும் மேற்பட்ட கைவினைக் கலைஞர்களின் தயாரிப்புகளை கண்காட்சியில காட்சிப்படுத்த அரசு வாய்ப்பு ஏற்படுத்தி கொடுத்துள்ளதாகக் கூறினார்,

இதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை அரசு உயர்த்தியுள்ளது என்றும், அவர் குறிப்பிட்டார்.

கைத்தறி, கைவினை உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் இந்தியாவுக்கான உற்பத்தி இயக்கத்தின் கீழ் தயாரிக்கப்பட்டது என்றும், உள்ளூர் பொருட்களுக்கு கூடுதல் வாய்ப்புகளை ஏற்படுத்தி தருமாறு பிரதமர் வலியுறுத்தி வருவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதே கண்காட்சியில் மாற்றுத்திறனாளி கைவினைக் கலைஞர்கள் புதுமையான முறையில் தயாரித்த பொருட்களை சந்தைப்படுத்த 35 அரங்குகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் திரு வீரேந்திரகுமார் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளை கண்டறிந்து அவர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்து வழங்க 22 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு க பொன்முடி தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் முகையூர் ஒன்றியத்தில் உள்ள அங்கன்வாடி மையத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் ஊட்டச்சத்து பெட்டகங்களை குழந்தைகளுக்கு வழங்கி பேசிய அவர், மத்திய அரசின் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இந்த பெட்டகங்கள் வழங்கப்படுவதாகக் கூறினார்.

விழுப்புரம் மாவட்டத்தில் ஊட்டச்சத்து குறைபாடுள்ள இரண்டாயிரத்து 64 குழந்தைகள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு இந்த பெட்டகங்கள் வழங்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

கர்ப்பிணி பெண்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் இத்தகைய பெட்டகங்கள் வழங்கப்பட்டு வருவதாக திரு பொன்முடி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மாநில அரசின் மக்கள் நலத் திட்டங்கள் விவசாயிகள் மற்றும் பொதுமக்களை சென்றடைய கூட்டுறவு அமைப்புகள் பெரிதும் துணை நிற்பதாக மாநில அமைச்சர் திரு ஆர் காந்தி தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் நேற்று நடைபெற்ற கூட்டுறவு வார விழாவை தொடங்கி வைத்து பேசிய அவர், கூட்டுறவு வங்கிகளில் கடன்பெறும் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் உரிய காலத்திற்குள் கடனை திருப்ப செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 39 கோடி ரூபாய் அளவுக்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

மகளிர் சுய உதவிக்குழுவினருக்கும், சிறு வணிகர்களுக்கும் தேவையான கடன்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் திரு ஆர் காந்தி குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

மகளிர் உயர்கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருவதாக மாநில உணவு அமைச்சர் திரு சக்கரபாணி தெரிவித்துள்ளார்,.

திண்டுக்கல் மாவட்டம் கள்ளிமந்தயம் ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள வருவாய் ஆய்வாளர் குடியிருப்புகளை நேற்று திறந்து வைத்தும், 14 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் அவர் பேசினார்.

விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தும் வகையில் மாநிலம் முழுவதும் விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும், அந்த வகையில் திண்டுக்கல் மாவட்டம் தொப்பம்பட்டியில் பத்து கோடி ரூபாய் மதிப்பீட்டில் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

ஒட்டன்சத்திரம், ஆத்தூர் ஆகிய பகுதிகளிலும் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளது என்றும் திரு சக்கரபாணி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

நடப்பு ஆண்டில் ஒன்பது தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு உரிமைத் தொகையாக 90 லட்சம் ரூபாய் வழங்கப்பட உள்ளதாக மாநில செய்தித்துறை அமைச்சர் திரு மு பெ சாமிநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இதுவரை 179 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களின் வாரிசுகளுக்கு 14 கோடியே 42 லட்சம் ரூபாய் உரிமைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

எழுத்தாளர் கா ப அறவாணன், கவிஞர் வேழவேந்தன், உள்ளிட்ட ஒன்பது தமிழறிஞர்களின் படைப்புகளுக்கான உரிமைத்தொகை வரும் திங்கட்கிழமை வழங்கப்பட உள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலையை சுற்றுலாத் தலமாக அறிவிப்பதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு எடுத்து வருவதாக ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் திரு மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று கல்வராயன் அருகே வெள்ளிமலையில் பிர்ஸா முண்டா பிறந்த நாளை முன்னிட்டு தொல் குடியின தின விழாவை நேற்று தொடங்கி வைத்து பேசிய அவர், கல்வராயன் மலையில் சுமார் எட்டு கோடியே 46 லட்சம் ரூபாய் செலவில் 65 மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருவதாகக் கூறினார்.

**[]<<<>>>[]**

ரஷ்யா – உக்ரைன் இடையே போர் தொடங்கிய பின்னர் கடந்த இரண்டு ஆண்டுகளில் முதல் முறையாக ஜெர்மன் சான்சலர் திரு **Olaf Scholz** ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டினுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

**[]<<<>>>[]**

லெபனானில் இஸ்ரேல் விமானப்படை நடத்திய வான் தாக்குதலில் மீட்புப் பணியாளர்கள் 15 பேர் உயிரிழந்தனர்.

**[]<<<>>>[]**

கடல் பகுதியில் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இந்திய கடற்படை இம்மாதம் 20-ஆம் தேதி முதல் 21-ஆம் தேதி வரை கடலோர பாதுகாப்பு ஒத்திகை பயிற்சி நடத்தவுள்ளது.

**[]<<<>>>[]**

உத்திர பிரதேச மாநிலம் ஜான்சியில் அரசு மருத்துவக் கல்ரி மருத்துவமனையில் நேற்று நேரிட்ட தீ விபத்தில் பச்சிளம் குழந்தைகள் பத்து பேர் உயிரிழந்தனர்.

**[]<<<>>>[]**

தில்லியில் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் நேற்று நடத்திய திடீர் சோதனையில் தொள்ளாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான கோகைன் போதைப்பொருளை பறிமுதல் செய்தனர்.

**[]<<<>>>[]**

சபரிமலை அருள்மிகு ஐயப்பன் திருக்கோவில் மண்டலபூஜை மற்றும் மகரவிளக்கு திருவிழாவுக்காக அதிகாலை நடை திறக்கப்பட்டது.

**[]<<<>>>[]**

தென்காசிக்கென்று மத்திய கூட்டுறவு வங்கி தொடங்கப்படும் என்று வருவாய்த்துறை அமைச்சர் திரு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் தொவித்துள்ளார்..

**[]<<<>>>[]**

நாமக்கல் மாவட்டத்தில் இன்று முதல் இம்மாதம் 22-ஆம் தேதி வரை பழங்குடியின மக்களுக்காக சிறப்பு குறைதீர் முகாம்கள் நடத்தப்பட உள்ளதாக ஆட்சியர் திருமதி உமா தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் ஆலயத்தில் ஐப்பாசி மாத பவுர்ணமியையொட்டி நேற்று லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் வந்தனர்.

**[]<<<>>>[]**

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் உள்ள பெரிய மாரியம்மன், சின்னமாரியம்மன், அழகு முத்து மாரியம்மன் கோவில் திருவிழாவையொட்டி நேற்று மாலை தெப்பத்திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

**[]<<<>>>[]**

கோவில்பட்டி அண்ணா பேருந்து நிலையம் சீரமைப்புப் பணிக்கா தற்காலிகமாக மூடப்பட உள்ளதால், பை-பாஸ் சாலையில் உள்ள கூடுதல் பேருந்து நிலயைத்திலிருந்து பேருந்துகள் புறப்படும் என்று நகராட்சி நிர்வாகம் அறிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான நான்காவது மற்றும் இறுதி டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 135 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ஜொகனஸ்பெர்க்கில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் ஆடிய இந்திய நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 283 ரன் எடுத்தது.

தொடக்க ஆட்டக்காரர் சஞ்ஜு சாம்சன் 56 பந்துகளில் 109 ரன்னும், திலக் வர்மா 47 பந்துகளில் 107 ரன்னும் அடித்தனர்.

284 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய தென்னாப்பிரிக்கா 18 புள்ளி இரண்டு ஓவரில் 148 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

நான்கு போட்டிகளை இந்த தொடரில் இந்தியா மூன்றுக்கு – ஒன்று என்ற ஆட்டக்கணக்கில் தொடரை வென்றது.

**[]<<<>>>[]**

பீகாரில் நடைபெற்று வரும் ஆசிய மகளிர் சாம்பியன் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று சீனாவை எதிர்கொள்கிறது.

இப்போட்டி மாலை மணி 4-45-க்கு தொடங்குகிறது,

முன்னதாக நடைபெறும் ஆட்டங்களில் மலேசியா - ஜப்பானையும், தென்கொரியா — தாய்லாந்தையும் எதிர்கொள்கின்றன.

**[]<<<>>>[]**

தேசிய ட்டிராக் சைக்கிளிங் சாம்பியன் போட்டி செங்கல்பட்டு மாவட்டம் மேலக்கோட்டையில் நேற்று தொடங்கியது.

இப்போட்டிகளை துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**